ந.க.எண். நுவி2/29778/2025
நாள் : 08.12.2025.

இயக்குநர் அலுவலகம்,
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

**சுற்றறிக்கை**

பொருள்: நுகர்வோர் விழிப்புணர்வு – உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை – வழக்கமான நுகர்வோர் பாதுகாப்புத் திட்டங்கள் – 2025 – 2026ம் நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது – திட்டச் செயலாக்கம் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குவது – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.117, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 17.10.2025.
2. அலுவலக நடைமுறைசாராக் கடிதக் குறிப்பு எண்.நுபா1/8030/2024, நாள் : 05.11.2025.
3. இயக்குநர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்களின் செயல்முறை ஆணை எண். நுவி2/29778/2025, நாள் : 08.12.2025

********

பார்வை–1ல் காணும் அரசாணையில், 2025 – 26ம் நிதியாண்டிற்கான வழக்கமான நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் செயலாக்கம் செய்திட ரூ.25,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை மாநில அளவில் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை செயலாக்கம் செய்திட ஏதுவாக அனைத்து மாவட்டங்களுக்கும் பார்வை–3ல் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையில் உபஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டது.

உத்தரவிடப்பட்டவாறு, உப ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை சென்னையைப் பொருத்தவரையில் துணை ஆணையாளர் (ந) வடக்கு/தெற்கு அலுவலர்கள் வங்கிக் கணக்கில் மற்றும் மாவட்டங்களைப் பொருத்தவரையில் (சென்னையை தவிர), மாவட்ட ஆட்சித் தலைவர் / மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் அலுவலக வங்கி கணக்கில் வரவு வைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. <u>மாவட்ட அளவிலான தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தினம் / உலக நுகர்வோர் உரிமைகள் தினக் கொண்டாட்டங்கள்</u>

❖ 24.12.2025ல் கொண்டாடப்பட வேண்டிய தேசிய நுகர்வோர் பாதுகாப்புத் தின விழா மற்றும் 15.03.2026ல் கொண்டாடப்பட வேண்டிய உலக நுகர்வோர் உரிமைகள் தின விழாவினை அனைத்து மாவட்டங்களிலும் சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் <u>31.03.2026க்குள்</u> சிறப்பான முறையில் நடத்திட உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். **மாவட்ட அளவில் நிகழ்ச்சிகள் நடத்தி**

முடிக்கப்பட்டதற்கான விரிவான அறிக்கைகள், புகைப்படங்கள் மற்றும் பயனீட்டுச் சான்றுகளை 15.04.2026க்குள் தவறாமல் பதிவஞ்சல் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் காலாண்டு கூட்டங்கள்

- மாவட்ட முகவரிப் பட்டியலில் இடம் பெற்றுள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் ஆண்டிற்கு நான்கு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமென அரசாணை (நிலை) எண். 389 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 28.12.1988– ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அதனடிப்படையில் தங்களது மாவட்ட முகவரி பட்டியலில் இடம்பெற்றுள்ள நாளது தேதிவரை புதுப்பித்து செயல்பாட்டில் உள்ள நுகர்வோர் அமைப்புகளை அழைத்து 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டம் நடத்தப்பட வேண்டும். நுகர்வோர்கள் பெருமளவில் பாதிக்கப்படும் / சேவைக் குறைபாடுகள் கொண்ட ஒரு பொருளை மையமாக வைத்து, தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் / புகார்கள் குறித்து விளக்கம் அளித்திட ஏதுவாக தொடர்புடைய அரசுத்துறை / சேவை நிறுவனத்தை அழைக்கப்பட வேண்டும்.

3. பொது

- நுகர்வோர் நலன் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள், மாவட்ட முகவரிப்பட்டியலில் இடம்பெற்றுள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், பள்ளி/கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ள குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள், சுய உதவிக்குழுக்கள், ஆகியோர்களை ஒருங்கிணைத்து விழாக்கள் கொண்டாடப்பட வேண்டும்.
- இந்நிகழ்ச்சிகளில் நுகர்வோர் நலன் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசுத் துறைகளான பொது சுகாதாரத்துறை, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத்துறை, சட்டமுறை எடையளவுகள் துறை (தொழிலாளர் நலத்துறை) மற்றும் இந்திய தர நிர்ணய அமைவனம், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் போன்ற அரசுத்துறைகளை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள அழைப்பதுடன், பொது மக்களாகிய நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வண்ணம் கண்காட்சி மற்றும் நேரடி விளக்க செயல்பாடுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- மாவட்ட அளவிலான விழா மேற்கொள்ளப்படும் நாளுக்கு முன்பாகவே வட்ட / மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு குறிப்பாக, தற்போதைய நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019ன் சிறப்பம்சங்கள், உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம் – 2006, பேக்கிங் மற்றும் லேபிளிங் சட்ட விதி மீறல்கள் கண்டறிதல், உணவுப் பொருள் வீணாவதை தடுத்தல் அல்லது தவிர்த்தல், தவறான விளம்பரங்களால் ஏற்படும் பாதிப்பிலிருந்து நுகர்வோர்கள் விழித்துக்கொள்ளுதல், மற்றும் இந்திய தர அமைவனத்தின் ISO முத்திரைகள் குறித்தும் மற்றும் ISI முத்திரைகள் உடன் கூடிய பொருட்களான helmet, pressure cooker போன்ற

பொருட்களை நுகர்தல் போன்ற தலைப்புகளை மையமாக கொண்டு ஓவி வரைதல் போட்டி, கவிதை / கட்டுரைப் போட்டி ஆகியவற்றை உள்ளடக் போட்டிகள் நடத்தி சிறப்பான பங்களிப்பு வழங்கிய முதல் மூன்று இடத்திற்கா மாணாக்கர்களை தெரிவு செய்து பரிசுத் தொகைகள் மற்றும் சான்றிதழ்கள் சிறப் விருந்தினரைக் கொண்டு வழங்கி கௌரவிக்கப்பட வேண்டும்.

❖ இவ்விழா தொடர்பாக உரிய பத்திரிக்கை செய்தி மற்றும் ஊடகம் வாயிலாக பிரச்சாரங்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பின்போது அறிவிப்பு செய்திட ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

❖ தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளில் சிறப்பான முறையில் செயல்படும் தன்னார்வ நுகர்வோர் ஆர்வலர்கள் இவ்விழாவில் நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து விழிப்புணர்வு தகவல்கள் வழங்கிட அழைக்கப்பட வேண்டும். நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள், நேர்மையற்ற வணிகமுறை, தேவைக்கேற்ற நுகர்வு மேற்கொள்ளும் கலாச்சாரம், பொது சுகாதாரம், சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு போன்ற தலைப்புகளை மையமாகக்கொண்டு விழிப்புணர்வு தகவல்கள் அடங்கிய கையேடுகள் (Pamphlets) தயார் செய்து நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைவருக்கும் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

❖ பள்ளி/கல்லூரிகளில் நன்முறையில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்ற மாணாக்கர்களை ஒருங்கிணைத்து, நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அதன் முடிவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்திற்கான வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகள் மற்றும் நற்சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்.

4. <u>மாவட்ட அளவில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய முன்னேற்பாடுகள்:</u>

➢ வழக்கமான நுகர்வோர் பாதுகாப்பு திட்டங்களை உரிய முறையில் மேற்கொள்ள மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் தேர்வு செய்யும் ஒரு வட்ட வழங்கல் அலுவலர் மற்றும் ஒரு தன்னார்வ நுகர்வோர் ஆர்வலர் உள்ளடக்கிய குழு ஒன்றினை உடனடியாக அமைக்க வேண்டும். இக்குழுவானது இவ்வழிக்காட்டு நடைமுறைகளை பின்பற்றி இந்நிகழ்ச்சியினை நன்முறையில் செயல்படுத்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

➢ திட்டங்களுக்கான பணப்பட்டுவாடா மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் செய்ய வேண்டும்.

➢ தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளை இப்பணிகளில் ஈடுபடுத்தும் போது அவ்வமைப்புகள் அரசு வழிகாட்டுதல்களின்படி செயல்படும் அமைப்புகளாக உள்ளனவா என்பதையும் அமைப்புகளின் பதிவுச் சான்று நாளது தேதிவரை புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும், அந்த அமைப்புகள் மாவட்ட அளவிலான முகவரிப்பட்டியலில் இடம் பெற்றுள்ளதையும் தவறாது உறுதி செய்து கொள்ளவேண்டும்.

➢ அறிவுரைகளின் அடிப்படையில் அனைத்து நிகழ்ச்சிகளும் முழுமையாக மேற்கொண்டு முடிவான அறிக்கை, புகைப்படங்கள் மற்றும் பயனீட்டுச் சான்றினை இயக்குநர் அலுவலகத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்க வேண்டும்.

மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலரின் நேர்முக உதவியாளரை 2025-26ம் ஆண்டிற்கான வழக்கமான நுகர்வோர் பாதுகாப்பு திட்டங்களின் செயலாக்கத்திற்கு முழுப்பொறுப்பு அலுவலராக நியமனம் செய்து மேற்சொன்ன அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், சுற்றறிக்கை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை உடன் இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/- உ. சிவராசு
இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக்குழு தலைவர்.
2. துணை ஆணையாளர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் (சென்னை நகரம்) வடக்கு / தெற்கு சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல்–

1. தலைவர், தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம் (TANSSCOPE) எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.
2. அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள்
3. கண்காணிப்பாளர், நுபா பிரிவு.
4. நுவி2 இருப்பு கோப்பு.

இயக்குநருக்காக